

# டிபிகேஎல் அதிகாரிகளின் ஊழல் புகார்களை எம்ஏசிசி விசாரிக்கும்

## -டாக்டர் ஸலிஹா

கோலாலம்பூர், ஜூன் 9-
கோலாலம்பூர் மாநகர மன்றத்தின் மூத்த அதிகாரிகள் மாதந்தோறும் லஞ்சம் பெற்றனர் என்ற குற்றச்சாட்டை மலேசிய ஊழல் தடுப்பு ஆணையம் (எம்ஏசிசி) முழுமையாக விசாரணை செய்யும் என்று பிரதமர் துறை அமைச்சர் ஸலிஹா முஸ்தாபா கூறினார்.

அனைத்து உள்ளாட்சி அமைப்பு ஊழியர்கள், அலுவலாகள தங்கள கடமைகளைச் செய்வதில் எப்போதும் நல்ல நிர்வாகத்தையும் நேர்மையையும் பேண வேண்டும் என்று அவர் நினைவூட்டினார்.

எங்கள் பணியிட கலாச்சாரத்தில், ஒருமைப்பாட்டின் முக்கியத்துவத்தை நான் அடிக்கடி வலியுறுத்துகிறேன். ஏனென்றால் அதிகாரத் துஷ்பிரயோகம் அல்லது தவறான நடத்தைகளைத் தடுக்கும் அதே வேளையில் மக்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதே எங்கள் இறுதி இலக்கு என்றார். நகரத்தின் மையத்தில் வெளிநாட்டவர்களால் நடத்தப்படும் வணிகங்களில் இருந்து மாதாந்திர லஞ்சம் வசூலிக்கப்பட்டது என்ற குற்றச்சாட்டுகளை விசாரிக்க உதவுவதற்காக, கடந்த வியாழன் (ஜூன் 6) 40 வயது மூத்த உள்ளூர் அதிகாரி ஒருவரை எம்ஏசிசி கைது செய்ததாக முன்னதாகத் தெரிவிக்கப்பட்டது.